ஓம்

நற்சிந்தனை 009 .010 . சமயசாரம்

சமய தத்துவ சாரம்

| சைவ சமயசாரம் | தத்துவம் | தெய்வம் | மந்திரம் |
|---|---|---|---|
| | | | |
| ஒரே சொல் | பரம்பொருள் | பராசிவம் | நமசிவாய |
| இரு சொற்கள் | சிவம் சக்தி | பராசக்தி | சிவாயநம |
| மூன்று சொற்கள் | பதி பசு பாசம் | கணதி | ஓம் கணபதி ஓம் |
| ஐந்து சொற்கள் | ஆணவம் கர்மம் மாயை | | |
| | நாதம் விந்து | | |
| இச்சாசக்தி; கிரியாசக்தி; ஞானசக்தி | | முருகன் | ஓம் சரவணபவ ஓம் |
| 36 வேடங்களின் உணர்வு | | குரு | ஓம் குருதேவாய நம ஓம் |

இவற்றை விரித்தால் ஆறாறு; முப்பத்தாறு காண்டங்கள் (வேடங்கள்): அஃதாவது தோற்றமும் ஒடுக்கமும் உள்ள தன்மை . சிவதாண்டவம்.

36 காண்டங்களாவன . இறை காண்டம் 5: போக காண்டம் 7: ஆத்ம காண்டம் 24.
இறை காண்டங்கள் 5 :. சிவ காண்டம்; சக்தி காண்டம்; சதாசிவ காண்டம்; மகேசுவர காண்டம்; தர்ம காண்டம்.
போக காண்டங்கள் 7 :. மாயை; காலம்; நியதி; கலை; வித்தை; பற்று; ஆன்மா.
ஆத்ம காண்டங்கள் 24 ஐயும் 5 பிரிவுகளாகப் பார்பது சுலபம்: அந்தக்கரணங்கள்.4; புலன்கள்.5; கர்மேந்திரியங்கள்.5; ஞானேந்திரியங்கள்.5; பூதங்கள்.5; ஆக 24.
அந்தக்கரணங்கள் 4 . சித்தம்; புத்தி; அகங்காரம்; மனம்.
புலன்கள் 5 . செவி; தோல்; கண்; நாவு; நாசி.
கர்மேந்திரியங்கள் 5 . சொல்லல்; நடத்தல்; கொடுத்தல்; கழித்தல்; காமுறல்.
ஞானேந்திரியங்கள் 5 . சுவை; ஒளி; ஊறு; ஓசை; நாற்றம்.
பூதங்கள் 5 . மண்; நீர்; தீ; வளி; விண்.

பிரபஞ்சம் . அகம்; புறம்.
உலகங்கள் 3 . கதைகளிலும் புராணங்களிலும் பூவுலகம் பாதாளம் தேவுலகம் நரகம் சுவர்க்கம் என்றெல்லாம் வரும்.
ஆயின் தத்துவத்தில்:

மண்ணுலகம் - உருவம்- பிரகிருதி - ஊனக்கண்ணுக்கு புலப்படுவன தெரியாதன எல்லாம்.

நுண்ணுலகம் - அருவுருவம்- சூட்சும உடலினர்; அந்தராத்மாக்கள்; பிதிரர்; கணங்கள்

விண்ணுலகம் - அருவம் - சிவசக்தி; தெய்வீக உறைவிடம்; பரிணாமமற்ற உலகு

குணங்கள் 3 - சாத்துவிதம்(பரிசுத்தம்); இராசதம்(ஆர்வம்); தாமதம்(மந்தம்).

சிவசக்தி 3 - இச்சா சக்தி; கிரியா சக்தி(செயல்); ஞான சக்தி(அறிவு)

பரிபூரணம் - குறைவற்ற நிறைவும் - நிறைவற்ற நிறைவும்! - சூன்யம்; சைவர்

ஒரு முறை சைவத்தின் உச்சத்தை சித்தர் சொல்லக் கேட்போம்;

| | |
|---|---|
| சித்திலே சிவமொ டுங்கச் | மற்றுப்பற்றை நீக்கு |
| சிவத்திலே சித்தொ டுங்க | கருவழியைக் கட |
| வுய்த்தவிவ் விரண்டு மற்ற | சும்மா இரு |
| வுண்மையே வுண்மை........ | வெளியிலே ஒளிகாண் |

சைவசமயத்தில் மேலும் நம்பிக்கை வழிபாடு; படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் மறைத்தல்; மகாபிரளையம்; மனக்கருத்து உள்ளுரு; தந்திரம் யோகம் ஞானம் முக்தி; சத் சித் ஆனந்தம் எனப் பலவும் உள்ளடங்கும்.

ஓம்